பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 19 திங்கட்கிழமை (02.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 126

# யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடக்கும்?

## அரசுத் தரப்பிலிருந்து தகவல்

கொழும்பு, ஏப்ரல் 2

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டின் எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்காக, அது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினால் என்ன என்பது பற்றி அரசுத் தலைமை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இது தொடர்பாக அரசின் கருத்து, நேற்று அரசு சார்பு ஆங்கில வார இதழ் ஊடாகக் கசிய விடப்பட்டிருக்கின்றது.

'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகையில் அதன் ஆசிரியர் டினேஷ் வீரவன்ஸ இது தொடர்பான செய்தியை வரைந்திருக்கிறார்.

'யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு?' - என்ற தலைப்பில் ஜனாதிபதி செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி பிரசுரமாகியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும்

(03ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகம் செல்ல முயன்ற 30 பேர் நெடுந்தீவில் கைது

நெடுந்தீவு, ஏப்.2

நெடுந்தீவில் இருந்து படகுகள் மூலம் சனிக்கிழமை இரவு தமிழகம் நோக்கிச் சென்றதாகச் சொல்லப்படும் 30 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (அ-1-111)

## இலங்கை விமானப்படைக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள்?

### அயல் நாடுகளிடம் வாங்க ஆலோசனை

கொழும்பு, ஏப்.2

தரையில் இருந்து விண்ணுக்கு ஏவும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது என்று இலங்கை விமானப்படை தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் வான்படை அச்சுறுத்தலை அடுத்தே அரச விமானப் படை இவ்வாறு ஏவுகணைகளை வாங்குவதற்குத் தீர்மானித்துள்ளதுஎன்று தகவல் வெளியாகியிருக்கின்றது.

இது தொடர்பாக விமானப்படை ஏற்கனவே அயல் நாடுகளுடன் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது. 'சார்க்' நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று இந்தியா செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தை இந்திய அரசிடமும் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை- கடந்த திங்களன்று அதிகாலை கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதல் குறித்து விசாரிப்பதற்காக ஐவர்அடங்கிய விசாரணைமன்றம் ஒன்றை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் றொசான் குணதிலக நியமித்திருக்கிறார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பேண அரசு இணங்காவிட்டால் பெரும் போர் வெடிக்கும்

## தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.2

''யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேணுவதற்கு அரசு விரும்பாவிட்டால், அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வாய்ப்பேயில்லை. அதேவேளை, மோசமான போரும் வெடிக்கும்.''

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

'ரொய்ட்டர்' நிறுவனத்துக்கு மின் அஞ்சல் மூலம் வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

புலிகளுடன் எந்த நேரமும் பேச்சுக்களைத் தொடங்கத் தமது அரசு தயாராக இருப்பதாக இலங்கை இந்த வாரத்தில் அறிவித்திருந்தது. ஆனால் அதேசமயம், புலிகள் தங்களை மீள ஒழுங்கமைத்து, ஆயுத ரீதியில் தங்களைப் பலப்படுத்தவும் யுத்த நிறுத்த உடன்படிக்கை உதவியுள்ளதாகவும் இலங்கை அரசு கூறுகின்றது.

''யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் இனிமேலும் நாங்கள் பேச்சைத் தொடரலாம் என்று நான் நம்பவில்லை.''

- என இலங்கையில் சமாதானச் செயலகப் பணிப்பாளரும் வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான பாலித கொஹன இந்த வாரம் கூறியிருந்தார்.

''மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே இந்த யுத்த நிறுத்த உடன்பாடு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும். எனவே களத்தில் யுத்தம் இருக்கக்கூடாது என்ற சிறிய விடயத்தை நோக்காகக் கொண்டதாக அல்லாமல், முழு பிரச்சினைக்குமே தீர்வு காண்பதற்கான பேச்சை அடிப்படையாகக்

(03ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கூட்டமைப்பு இன்று கூடுகிறது

கொழும்பு, ஏப்.2

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டமை தொடர்பாக நாடாளுமன்றில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கூடுகிறது.

இன்று மாலை 5 மணிக்கு கொழும்பில் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் கூடி

(03ஆம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்பது பெரும் கேலிக்குரியது

### ஐ.தே.க. செயலாளர்

கொழும்பு, ஏப்.2

போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்பது பெரும் கேலிக்குரிய ஒன்றாகும். இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

போர்நிறுத்தத்தில் இருந்து விலகவேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால் 14 நாள் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு அவ்வாறு செய்யலாமே. அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு எதற்கு - என்றும் அவர் கேட்டார்.

இதேவேளை -

போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்நதும் முன்னெடுப்பதா? இல்லையா? என்பது குறித்தும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு எதுவும் தேவையில்லை என்று அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் தெரிவித்துள்ளார். (அ-1)

## ஜனாதிபதி இந்தியாவுக்கு

கொழும்பு, ஏப்.2

புதுடில்லியில் நாளை ஆரம்பமாகவிருக்கும் சார்க் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமாலை புதுடில்லி பயணமானார்.

'மிகின் ஏயர்' மூலம் சென்றுள்ள இவர் மாநாட்டில் பங்குபற்றுவதுடன் அங்கு வரும் ஏனைய நாட்டுத்தலைவர்களுடன் தனிப்பட்ட முறையிலும் பேச்சுக்கள் நடத்தவுள்ளார். (அ-1)

## ஊரடங்கு மாலை 6 மணி முதல்

யாழ்ப்பாணம், ஏப்.2

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் இன்று மாலை 6 மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்கு நாளை அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்று பலாலி படைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

இதுவரை இரவு 8 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை நடைமுறையில் இருந்த ஊரடங்கு, நேற்றுமுதல் மாலை 6 மணி முதல் அதிகாலை 5 மணிவரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. (1)

## புளியங்குளம் சோதனைச்சாவடி அருகே லோறி மீது ஹெலிகள் றொக்கெட் தாக்குதல்

கொழும்பு, ஏப்.2

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் கடந்த திங்களன்று வான் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது அரச விமானப்படை அதன் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

'பரா' வெளிச்சக் குண்டுகளின் உதவியுடன் விமானங்களும் சண்டைக் ஹெலிக்கொப்டர்களும் குண்டுத்தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஏ - 9 வீதியில் ஓமந்தை பயணிகள் சோதனைச் சாவடிக்கு அப்பால் - புளியங்குளம் பயணிகள் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டிருந்த லொறிகள் மீது விமானப்படை ஹெலிக்கொப்டர்கள் இருளில் வந்து றொக்கெட் தாக்குதலை நடத்தியிருக்கின்றன.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் நிறுத்தப்பட்டிருந்த -

(03ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' வெளிவிவகாரச் செயலாளர்கள் பயங்கரவாதம் தொடர்பில் விவாதம்

### கூட்டுச் செயற்பாட்டுக்கு இலங்கை அழுத்தம்

கொழும்பு, ஏப்.2

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஆயுதக்கடத்தல், போதைப் பொருள் கடத்தல், பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் இலங்கை உள்ளிட்ட 'சார்க்' நாடுகளில் இடம்பெறுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று 'சார்க்' வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள் மட்டத்தில் இடம்பெற்ற மாநாட்டில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பாலித கொஹன்ன நேற்று இந்தியாவிலிருந்து தொலைபேசி மூலம் இத்தகவலை 'சுடர் ஒளி' க்குத் தெரிவித்தார்.

இலங்கையில் பயங்கரவாதம் இருப்பதை இம்மாநாட்டில் கலந்துகொண்ட 'சார்க்' நாடுகளின் வெளிவிவகார அமைச்சின்

(03ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக் கடற்படையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் இன்று ஆர்ப்பாட்டம்

## ம.தி.மு.க. பங்கேற்பு; அ.தி.மு.க. ஆதரவு

சென்னை, ஏப்.2

இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்எனத் தெரிவிக்கப்படும் தமிழக மீனவர்கள் ஐவரின் படுகொலைகளைக் கண்டித்து இன்று தமிழகம் முழுவதும் பகிஷ்கரிப்புடன் கூடிய பாரிய ஆர்ப்பாட்டம் மீனவர் சங்கங்களின் ஏற்பாட்டில் இடம்பெறும்.

இந்தப் பெரும் ஆர்ப்பாட்டத்துக்குப் பல கட்சிகளும் இணைந்து தமது ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்க முன்வந்துள்ளன.

இதில் தாமும் கலந்துகொள்வார் என ம.தி.மு.கவின் பொதுச் செயலர் வைகோ அறிவித்திருக்கிறார்.

அ.தி.மு.கவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றும் என்று அதன் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவை அக்கட்சி ஏற்கனவே வழங்கியுள்ளது.

தேசிய முன்னேற்ற திராவிடர் கழகமும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றும் என்று அதன் தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவை தமது கட்சி வழங்கவிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

மீனவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து ஆளும் தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தன. (அ-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதிவெடி விழிப்புணர்விற்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04
சர்வோதயம் யுனிசெவ்
(சி/48853)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வரட்ணம் - தமயந்தி தம்பதிகளின்
செல்வப்புதல்வன் **அபிஷயன்**

இன்று (02.04.2007) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை தெணியகம், பொலிகண்டியிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தா, அத்தைமார், மாமாமார், அன்ராமார், சித்தாமார், தாத்தாமார், அம்மம்மாமார், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார் அனைவரும் அம்மன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**க.மார்க்கண்டு**
(அப்பப்பா குடும்பத்தினர்)

**அபிஷயன்**
02.04.2007

'செல்வந்தான்'
இமையாணன்.




பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளுக்கு இந்த விடுமுறையில் நீங்கள் அளிக்கும் புத்தாண்டுப் பரிசு என்ன?
இன்றே இணையுங்கள்...
Certificate in Computing for Kids
(ஆண்டு 1 முதல் 9 வரை)

**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

| | | |
|---|---|---|
| A/L தமிழ்-2008<br>பிரிவு II<br>சனி, ஞாயிறு 5 p.m<br>Mr. S.சிவா B.A(Hons) | சித்திரம்<br>A/L, O/L & Gr. 10<br>Mr. S.நிரசாந்தன்<br>B.F.A (Hons) | சிங்களம்<br>(எழுத,பேச,வாசிக்க)<br>Mr. A.Ranjan<br>சனி, ஞாயிறு 2 p.m |

SAMROCK கச்சேரியடை, யாழ்.


# துயர் பகிர்கின்றோம்



## ஸ்ரீவன் ஜெயபால செல்லத்துரை

(S.J.செல்லத்துரை / தாழ செல்லத்துரை)

நிர்வாக கிராம உத்தியோகத்தர் - யாழ்ப்பாண பிரதேச செயலகம்.
தலைவர் - யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்

ஒரு தொழிற்சங்கவாதியின் மகனாக உதித்தவர்
உதிரும் வரை தொழிற்சங்கவாதியாக வாழ்ந்தவர்
கிராம உத்தியோகத்தர்களின் நலன்களில் இறுதிவரை
அக்கறையுடன் செயற்பட்டு அவர்களின் தேவைகளை
அறிந்து அக்கறையுடன் பூர்த்தி செய்து வைத்தவர்.

தலைவரின் மறைவை வெறும் வார்த்தைகளினால்
வெளிப்படுத்த முடியாது. நாங்கள் ஒவ்வொருவரும்
ஒவ்வொரு வினாடியும் உணர்ந்து கொண்டே இருப்போம்.

அமரர் S.J.செல்லத்துரை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## ஜெயராசலிங்கம் பிரதீபா

இடையிலே விடைபெற்று எங்கு
சென்றாய் - எம்
இதயத்தை ஈட்டியினால் ஏன்
கொன்றாய்
விடையின்றித் திகைப்புற்று
இடர்பட்டு-நாமே
விழுந்தோம், விம்மினோம், விழிநீர்
சொரிந்தோம்.

தோற்றம்: 08.12.1977
மறைவு: 03.03.2007

கடந்த 03.03.2007 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தீபத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (02.04.2007) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(59203) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்



## K.V.வேலுப்பிள்ளை (தவம்)

(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்)

மண்ணில் 20.01.1937
விண்ணில் 13.04.2006

திதி:02.04.2007

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு. குடும்பத்தினர்.

# இதயம் நீங்காத இளவல்களின் முதலாமாண்டு நினைவலைகள்



மண்ணில் 11 ✿ 01 ✿ 1970
மனதில் 13 ✿ 04 ✿ 2006



மண்ணில் 19 ✿ 07 ✿ 1966
விண்ணில் 14 ✿ 07 ✿ 2005

திதி: 02.04.2007

அமரர்
## பஞ்சாட்சரம் கிருபாகரன்
(உரிமையாளர் - சாரங்கன் நகைமாடம்)

அமரர்
## பஞ்சாட்சரம் சிவகுமார்

ஒரு கூட்டில் வாழ்ந்த உறவுக் குயில்களே!
உணர்வில் நிறைந்த உன்னத உறவுகளே!
ஓராண்டு எல்லைக்குள் இரண்டு இழப்புகளா?
எங்கள் இதயங்கள் இதையும் தாங்கிடுமா?

வருவீர் வருவீரென வழி பார்த்துக் காத்திருந்தோம்!
விழிநீரால் உருகி விதிர்விதிர்த்து மனம் துடித்தோம்!
எரியில் நீறாக்கிவிட்டு இதயங்கள் பதைபதைக்க
இங்கிருந்து ஏங்குகிறோம்! இனியோரே அமைதி கொள்க!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(59151)

என்றென்றும் மறவாத நினைவுடன் நினைவுகூரும்

கண்டி வீதி,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## ஜனநாயகத்தின் பெயரால் யுத்தநிறுத்தத்துக்குச் சாவுமணி?

இலங்கையின் இனப்பிரச்சினை மிகக் கூர்மையடைந்தமைக்கு முக்கியமான காரணம், நாட்டின் நிர்வாக விடயங்கள் நீதி, நியாயம், தார்மீகம் ஆகியவற்றின் அடிப்படையில் அணுகப்படாமல், பெரும்பான்மை - சிறுபான்மை என்ற எண்ணிக்கை அடிப்படையில் கையாளப்பட்டமைதான் என்பது கண்கூடு.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கை மீதான தங்களின் பிடியைக் கைவிட்டு, ஆட்சி அதிகாரத்தை உள்நாட்டவர்களிடம் - சுதேசிகளிடம் - ஒப்படைத்தபோது பெரும்பான்மையினர் என்ற அடிப்படையில் அது சிங்களவர்களின் கைகளில் போய் வீழ்ந்தது.

சிங்களப் பெரும்பான்மையினரிடம் அரசியல் அதிகாரம் வீழ்ந்ததும், சிங்களப் பேரினவாதம் மேலாண்மை அதிகாரம் பெற்றது. இதனால் சிறுபான்மையினருக்கு எதிரான அரச அடக்கு முறை குரூர வன்முறை வடிவம் எடுத்து, தமிழின அழிப்பு அத்தியாயங்களாக அரங்கேறியது.

பெரும்பான்மை இனத்தவர்கள் என்ற கோதாவில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினருக்குக் கிடைத்த - அட்சரகணிதப்படியான - அதிகளவு ஆசன எண்ணிக்கை, நாடாளுமன்றத்தை சிறுபான்மையினருக்கு எதிரான கொடுங்கோன்மைச் சட்டம் இயற்றும் அரங்காக மாற்ற உதவியது. அங்கு இன்றுவரை இனவாதமே அரசோச்சுகின்றது. சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் அங்கு தொடர்ந்து இயற்றப்பட்டன.

எண்ணங்களை விட எண்ணிக்கை பெரிதாகக் கருதப்பட்டதால் - நீதியையும் நியாயத்தையும் விட, ஆதரவு வாக்குகளின் கணக்கில் உயர்ந்து நின்ற அநீதியே பெரிதெனப் போற்றப்பட்டதால் - சிறுபான்மையினருக்கு எதிரான கொடூரங்களும் அடக்குமுறைகளும் ஜனநாயகத்தின் பெயரால் அங்கு நியாயமாக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நீதி வழங்கும் விடயத்தில், இந்த வாக்கு எண்ணிக்கை விவகாரத்தைக் காட்டியே சிங்களத் தலைமை 'உச்சி' , தப்பித்து - வருகிறது என்பதும் உலகறிந்த இரகசியம்.

இப்போதும் நீதி, நியாயமாக விவகாரங்களைக் கையாளாமல், அதிலிருந்து பிறழ்வதற்கான மற்றொரு சந்தர்ப்பத்துக்கும் மஹிந்தரின் அரசும் இந்த வாக்கு எண்ணிக்கை விவகாரத்தையே இலாவகமாகப் பயன்படுத்தப் போகின்றது என்ற செய்தி கசிந்திருக்கின்றது.

அரசின் ஏடான ஏரிக்கரைப் பத்திரிகையின் நேற்றைய ஞாயிறு வெளியீடு, இந்தத் தகவலைக் கசிய விட்டிருக்கின்றது.

'அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் 2001 ஆம் ஆண்டு முற்பகுதியில் செய்துகொள்ளப்பட்டு, ஐந்து வருடங்களைக் கடந்துள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டின் எதிர்காலம் குறித்துத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு ' - என்ற கேள்விக்குறியோடு ஜனாதிபதி செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

போர் முனைப்போடு செயற்படும் மஹிந்தரின் அரசு, யுத்த நிறுத்தத்தை முறித்து, முழு அளவிலான போரில் குதிப்பதற்குத் தயாராக நிற்கின்றது. அமைதி வழியில் சமாதானத் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளில் இதய சுத்தியோடு ஈடுபடுங்கள் என்று சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தம், மஹிந்தரின் அரசின் காதுகளில் நாரசமாய் ஒலிக்கின்றது.

யுத்த நிறுத்தத்தை முறித்து, தனது போர் வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விடுவது சர்வதேச ரீதியில் தமக்கும், தமது அரசுக்கும் பெரும் பின்னடைவுகளையும், எதிர்ப்பையும், சிக்கல்களையும் தோற்றுவிக்கும் என்பதை நன்கு உணர்ந்துள்ள மஹிந்தர், போரைக் கட்டவிழ்த்து விடுவதற்கான அங்கீகாரத்தை 'ஜனநாயக வழிமுறை' என்ற கேலிக்கூத்தின் மூலம் பெற்றுக் கொள்ளும் புதிய அபத்த நாடகம் ஒன்றை அரங்கேற்ற விரும்புகின்றார் போலும்.

*'நானாக விரும்பி யுத்த நிறுத்தத்தை முறிக்கவில்லை. இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் கூறினார்கள். ஆகவே யுத்தநிறுத்தத்தை முறிக்கிறேன். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாக நாட்டின் ஜனாதிபதி செயற்படமுடியாது.'* - என்று சர்வதேச சமூகத்துக்கு சமாதானம் கூறிக் கொண்டு, தமது யுத்த வெறிப் போக்கைக் கட்டவிழ்த்து விடத் தயாராகின்றார் ஜனாதிபதி.

'யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு?' - என்ற தலைப்பில் அரச ஊடகம் வெளியிட்ட முதலாம் பக்கப் பிரதான செய்தியின் பின்னால் பொதிந்துள்ள ஆழமான அர்த்தம் இதுதான்.

நாட்டில் யுத்தத்தையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தும் முழு அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. அரசமைப்பின் 33(உ) பிரிவு இதனைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துரைக்கின்றது.

எனவே நாட்டின் தேசியச் சிக்கலான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு யுத்தநிறுத்தம் அவசியமா? அல்லது யுத்த நிறுத்தத்தை முறித்துப் போருக்குப் போவதா ? - என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் ஜனாதிபதிதான்.

இவ்விடயத்தில் சிறுபான்மையினருக்கு நீதி செய்வதற்கு எது அவசியம் என்பதை நியாயத்தின் அடிப்படையில் அவர் தீர்மானிக்க வேண்டுமே தவிர, வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையிலான முடிவின் பிரகாரம் தீர்மானிக்கக் கூடாது.

ஆனால் வழமைபோல - சிறுபான்மையினருக்குத் தீங்கிழைப்பதற்குப் பெரும்பான்மையினரின் எண்ணிக்கையை 'ஜனநாயக முறைப்படி' (?) பயன்படுத்துவது போல - இதிலும் சர்வஜன வாக்கெடுப்பு என்ற கணக்கு அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

மொத்தத்தில், இது, ஜனநாயகத்தின் பெயரால் யுத்த நிறுத்தத்துக்கு சாவுமணி அடிக்கும் எத்தனம் ஆரம்பித்து விட்டது என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

# புலிகளின் நீர்மூழ்கிகளை முறியடிக்கும் வல்லமை இலங்கைக் கடற்படைக்கு உண்டு!

## கடற்படைப் பேச்சாளர் உறுதியாகக் கூறுகின்றார்

கொழும்பு,ஏப்:2

புலிகள் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் தாக்குதல் நடத்த முற்படுவார்ளேயானால், அத் தாக்குதல்களை முறியடிப்பதற்கான சரியான பாதுகாப்பு முறைமை அரச கடற்படையினரிடம் உள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் நான்கு அண்மையில் அழித்தொழிக்கப்பட்டமை எமது பலத்திற்குச் சான்று என்றும் அவர் கூறினார்.

புலிகள் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்கலாம். அல்லது வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யலாம் - என்று இந்திய கடற்படை அதிகாரி செளஹான் கூறியிருந்தார். இது தொடர்பாகக் கருத்துக் கூறிய இலங்கை கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் நீர்மூழ்கிக் கப்பலைத் தயாரிக்கவுள்ளனர். அல்லது கொள்வனவு செய்யவுள்ளனர் என்று இந்தியக் கடற்படை அதிகாரி செளஹான் கூறியுள்ளார்.

புலிகள் அவ்வாறு செய்வார்களேயானால் அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றாலும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் அவர்கள் தாக்குதல் நடத்தினால் அதனை முறியடிக்கும் சரியான பாதுகாப்புத் திட்டம் எம்மிடமுள்ளது.

நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அத்திட்டம் என்னவென்று சொல்லமுடியாது. அவ்வாறு சொன்னால் அது புலிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடும்.

புலிகள் மேற்கொள்ளும் எந்த விதமான கடற் தாக்குதல்களையும் முறியடிக்கும் ஆற்றல் எம்மிடம் உண்டு. அதை நாம் நிரூபித்தும் காட்டியுள்ளோம்.

கடந்த வருடமும் இந்த வருடமும் வெளிநாடுகளில் இருந்து புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த நான்கு கப்பல்களை நாம் அழித்தொழித்துள்ளோம்.

கடந்த வருடம் ஒரு கப்பலும் இந்த வருடம் மூன்று கப்பல்களுமே அழிக்கப்பட்ட நான்கு கப்பல்களாகும்.

இது தவிர புலிகள் மேற்கொண்ட பல கடற்தாக்குதல்களை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம். புலிகள் மேற்கொள்ளும் எந்தத் தாக்குதல்களையும் முறியடிக்க நாம் தயார் - என்றார். (சி)

## கைதடியில் நேற்று மாலை ஒருவர் சுட்டுக்கொலை

கைதடி,ஏப்.2

கைதடி ஊரியான் தரவைப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். கைதடி கிழக்கைச் சேர்ந்த கணபதி சிவராசா(வயது 34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். (அ-1-75)

## செட்டிகுளத்தில் நேற்று இரு தாக்குதல் சம்பவங்கள்

கொழும்பு,ஏப்.2

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

இதே பகுதியில் பொலிஸாரின் காவலரண் ஒன்றின் மீதும் விடுதலைப் புலிகள் சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸார் பதில் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், எனினும் இச்சம்பவத்தில் படையினருக்கு எதுவித சேதங்களும் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், தனியார் வர்த்தகர்களுக்கு சொந்தமான - லொறிகள் மீதே குண்டு வீச்சு நடத்தப்பட்டிருக்கிறது என்று வன்னியிலிருந்து வெளியாகிய தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான லொறிகளில் ஒன்று துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்குச் சொந்தமானது என்று ஒரு தகவல் தெரிவித்தது.

ஹெலி தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. ஆனால் சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் ஓமந்தை அருகே உள்ள விடுதலைப் புலிகளின் பீரங்கி நிலை மீதே மேற்கொள்ளப்பட்டது என்று ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

மன்னார் வட்டகையில் உள்ள விடுதலைப் புலிகளின் கடற்தளம் ஒன்றின் மீதும் வான் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (சி)

## இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படையின் பிரதம தலைமை அதிகாரி தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் இந்தக் குழுவில் விமானப் படையின் பொறியியல் பிரிவு, மருத்துவப்பிரிவு, ஆகாயப் பாதுகாப்பு அமைப்பு ஆகிய பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிரேஷ்ட அதிகாரிகள் ஐவரும் இடம்பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படைத் தளத்தில் பொருத்தியிருந்த ராடர்கருவி இயங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்ற தகவல் விடுதலைப் புலிகளுக்கு எவ்வாறு எட்டியிருக்கிறது என்பது உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இந்த விசாரணை மன்றம் விசாரணைகளை நடத்தும். (சி)

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வர் என்று கட்சிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அகதி முகாம்களில் அகதிகள் படும் துன்பங்கள் குறித்தும் தற்போதைய வடக்கு - கிழக்கு நிலைமை பற்றியும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு அவை தொடர்பாகவும் நாடாளுமன்றில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (சி)

## யுத்தநிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் 2001 பெப்ரவரி 23ஆம் திகதி யுத்தநிறுத்தத்துக்கு வழி செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அப்போது பதவியிலிருந்த அரசின் சார்பில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன.

இலங்கைத் தரப்பில் அரசுகள் மாறிவிட்டன. அரசுத் தலைவர்கள் மாறிவிட்டனர். யுத்தநிறுத்த ஒப்பந்தமும் பலத்த இக்கட்டுக்குள் சிக்கி நெருக்கடிக்குள் ஆழ்ந்துள்ளது. அது எந்நேரமும் முறியலாம், முழு அளவில் போர் வெடிக்கலாம் என்ற நிலைமை.

யுத்தநிறுத்தம் இன்னும் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்பட்டாலும், ஒரு மறைமுக யுத்தம் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் அரசின் உத்தேசம் பற்றிய செய்தி கசிய விடப்பட்டிருக்கின்றது.

இந்த உடன்பாடு குறித்து மக்களின் கருத்தையும் அவர்களின் ஆணையையும் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி விரும்புகின்றார் எனவும் -

அதனாலேயே இவ்விடயம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து அவர் ஆலோசிக்கின்றார் என்றும் -

மேற்படி அரச ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யுத்த நிறுத்த உடன்பாட்டை பல்லாயிரம் தடவைகள் விடுதலைப் புலிகள் மீறியுள்ள நிலையில் தொடர்ந்தும் அது கடைப்பிடிக்கப்படவேண்டுமா? என்பது குறித்து மக்களின் கருத்தை அறிய ஜனாதிபதி விழைகிறார் என்றும் அதில் மேலும் கூறப்பட்டிருக்கின்றது. (சி)

## சார்க் வெளிவிவகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றும் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக அவர்கள் ஒருமித்த கருத்துடன் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

'சார்க்' மாநாட்டின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள் மட்டத்திலான மாநாடு சனிக்கிழமை புதுடில்லியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்னவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்-

சனிக்கிழமை இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள் மட்டத்திலான மாநாட்டில் 'சார்க்' நாடுகளின் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது தொடர்பாகப் பேசப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் ஆயுதம் கடத்துதல், போதைப்பொருள் கடத்துதல், பயங்கரவாத அமைப்புகளுக்குநிதி சேகரித்தல், அவ்வமைப்புகளுக்கு உத்தரவாதப் பிரசாரம் செய்தல் போன்றவை பயங்கரவாத செயற்பாட்டுடன்தொடர்புபட்டவையாகும்.

இச்செயற்பாடுகள் சார்க் நாடுகளிடையே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

குறிப்பாக இலங்கையில் பயங்கரவாதம் இருப்பதை இதில் கலந்து கொண்ட செயலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதை இல்லாதொழிப்பது தொடர்பாக ஒருமித்த கருத்தைஅவர்கள் வெளியிட்டுள்ளனர்.

'சார்க்' பிராந்தியத்தில் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும். அவற்றைத் தடை செய்வதற்கான முறையான திட்டம் வகுக்கப்படவேண்டும் என்று இம்மாநாட்டில் அழுத்தம் கொடுக்கப்பட்டது. -என்றார். (சி)

## யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதாக எமது அணுகுமுறை அமைய வேண்டும்.'' - என கொஹண கூறியிருந்தார். அந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே தமிழ்ச்செல்வனின் பேட்டி அமைந்துள்ளது.

சு.ப.தமிழ்ச்செல்வன் அந்தப் பேட்டியில் கூறியிருப்பவையாவது:-

### யுத்தத்தில் கால் பதிக்க அரசு விரும்புகிறது

''யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்தவும் அது குறித்து ஆராயவும் இலங்கை அரசு மறுக்குமானால் அது முழு அளவிலான யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதாகவே அமையும்.

மேலும் அப்போக்கு தீவிரப்படுத்தப் பட்ட யுத்தத்தில் அரசு கால் பதிப்பதாகவே அர்த்தப்படும். முழு அளவிலான போருக்கும், பேரழிவு யுத்தத்துக்கும் அது வழிசெய்யும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கைத்தீவில் பெரும் துன்பியல் நிலைமைகளும், அழிவுகளும் தவிர்க்க முடியாதனவாகும்.

யுத்தநிறுத்த உடன்பாடு ஒரு சரித்திரப் பிரசித்தி மிக்க திருப்பு முனை. அது வன்முறைகளுக்கு முற்றப்புள்ளி வைத்தது. மனித அவலங்களுக்கு முடிவு கட்டியது. இரு தரப்புகளுக்கும் இடையில் புரிந்துணர்வு அபிவிருத்தி அடையவழிசெய்தது. நேரடிப் பேச்சை சாத்தியமாக்கியது.

இந்த சரித்திரபூர்வ நிகழ்வை புறமொதுக்கிவிட்டு தீர்வு காண்பதற்கான பேச்சுகளை நடத்துவது என்பது சாத்தியமானதல்ல.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் யுத்தநிறுத்த உடன்பாட்டை நூறு வீதம் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மட்டுமே நேரடிப்பேச்சுக்கான சூழலை உருவாக்க முடியும்.

தற்போதைய வன்முறைகளுக்கும் மனிதப் பேரவலங்களை ஏற்படுத்தும் நிகழ்வுக்கும் முடிவு கட்டப்பட்டால் மட்டுமே அமைதிப் பேச்சுக்கான சூழலை உருவாக்க முடியும்'' - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## நாளை

பங்குனி - 20
செவ்வாய்க்கிழமை
03.04.2007
திதி: பிரதமை
பின்னிரவு : 12.51
நட்சத்திரம்: அத்தம்
காலை : 08.03
சுபநேரம் : 10.40 - 12.10
ராகுகாலம் : 03.10 - 04.40

## இருவரைக் காணவில்லை; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.2

குடாநாட்டில் காணாமற்போன இருவர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் பூநாறி மடத்தடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகலிங்கம் (வயது 35) என்பவர் சற்றுத் தொலைவிலுள்ள நாச்சிமார் கோயிலடிக்கு சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சென்றார். அவர் அடுத்தநாள் வரை வீடு திரும்பவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்த சைக்கிள் திருத்துநரான சின்னக்கண்டு ஜெகசீலன் (வயது 27) என்பவர் பயண அனுமதியைப் பெறுவதற்காக கொழும்புத்துறை சிவில் நிர்வாக அலுவலகத்துக்குச் சனிக்கிழமை காலை 8 மணிக்கு சென்றார். அதன் பின்னர் அவர் காணாமற்போனதாக அவரது மனைவி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை -

கொழும்புத்துறையைச் சேர்ந்த ஜெ.ஜேதிலீபன் (வயது 19) என்பவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6.10 மணியளவில் தமது வீட்டிலிருந்து, அருகில் உள்ள கடைக்குச் சென்றார் என்றும் அதன் பின்னர் காணாமற்போயுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கெருடாவிலில் இளைஞன் சடலம் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

சாவகச்சேரி, கெருடாவில் மண்டுவில் பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த மகாலிங்கம் தவராசா(வயது 26) என்பவரின் சடலம் என இனங்காணப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் கடத்திச் செல்லப்பட்ட இவர் நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ். ஆஸ்பத்திரிக்கு சடலம் அனுப்பப்பட்டுள்ளது.(1)

## வெளிமாவட்டப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப்.2

வெளிமாவட்டப் பல்கலைக் கழகங்களுக்கு 2006 - 2007 கல்வி ஆண்டுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்கள் யாழ். செயலகத்திற்குக் கிடைத் துள்ளன.

விவரங்களை யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபரிடம் பார்வையிடலாம். (1-202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.1

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும் இலவச கணனி ஆங்கில கற்கைநெறிகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

* * *

தாவடி, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதா மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு பூரணை விழா இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், 'நல்லொழுக்கமும் ஆன்மீக வாழ்வும்' என்ற தலைப்பில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேசன் ஆன்மீக உரை நிகழ்த்தவுள்ளார்.

* * *

யாழ். மத்திய சத்தியசாயி சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு கைலாய பிள்ளையார் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள நிலைய வளாகத்தில் போயா தின ஆன்மீக நிகழ்வு இடம்பெறவுள்ளது. நாராயண ஹோமமும் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு போயா ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறும். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கல்விவலய நடன ஆசிரியர்கள் நடத்தும்
**பாராட்டு விழா (ஜனாதிபதி விருது)**



கலாகீர்த்தி விருதுபெற்ற
**திருமதி சாந்தினி சிவநேசன்**
அவர்களுக்கு

தலைவர்:
*செல்வி ரஜிதா சின்னத்துரை*
(யா/பெரியபுலம் மகாவித்தியாலம்)

பிரதம விருந்தினர்:
*பேராசிரியர் அ.சண்முகதாஸ்*
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திருவாளர் வே.தி.செல்வரட்ணம்
(கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)

இடம்: யா/இந்து மகளிர் கல்லூரி
காலம்: 02.04.2007 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணி

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 25 - 03 - 1933



விண்ணுலகில் 18 - 03 - 2003

### வேலாயுதன் வீரகத்தி

*திதி - பௌர்ணமி*

*அன்பூட்டி அறிவூட்டி அரவணைத்த எம் அன்பு தந்தையே ஆண்டுகள் நான்கு அணைந்தாலும் ஆறவில்லை நம்துயரம்.*

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மாசேரி, வரணி.* (59232)

## ஆறாம் மாத நினைவலைகள்

மண் மகிழ 29 - 11 - 1938



கண் நெகிழ 07 - 10 - 2006

### அமரர் லயன் கதிர்காமத்தம்பி நாகராசா (ஜே.பி)

*(B.Com., M.A., இளைப்பாறிய அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, இந்து கலாசார திணைக்களம், சமூக சேவைகள் அமைச்சு, யாழ்.மாவட்ட இணைப்பாளர்)*

*அழுது புலம்புகையில் மாதங்கள் ஆறு கடந்ததுவே!*
*தோற்றம் மறைந்தாலும் துயரங்கள் மறையவில்லை.*
*காலம் மறைந்தாலும் கவலைகள் மாறவில்லை*
*ஞாலம் விட்டு அகன்றாலும் எம் நெஞ்சை விட்டகலவில்லை.*

*8ஆம் கட்டை,*
*மல்லாகம்.* (59163) **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நீங்கா நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*அன்னை மடியினிலே* 10 * 04 * 1922



*ஆண்டவன் அடியினிலே* 03 * 03 * 2007

### திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா

முன்னானை மக்களுக்கு முதல்வி நீயம்மா!
முன்னுள்ள விநாயகர்க்கு முப்பழங்கள் நீயம்மா!
முதுமை எனக் காலனவன் முடித்தானே உனையம்மா!
முயலுகின்றோம் மறப்பதற்கே
முடியவே முடியவில்லை.

**இன்று (02.04.2007) திங்கட்கிழமை அன்னாரது மனையில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அன்னபோசனத்திலும் அமர்ந்து அலங்கரிக்குமாறு உற்றார், உறவுகளை உரிமையுடன் அழைக்கின்றோம்.**

*ஆவலுடன் அன்புள்ளங்கள்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
(59207) அவர் வழித்தோன்றல்கள்.

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகணந்தம் ஜெகஜெனனி



தாளையடி ஒழுங்கை திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாவும் கொண்ட யோகணந்தம் ஜெகஜெனனி 31.03.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகணந்தத்தின் அன்பு மனைவியும் சபாரத்தினம் சிவபாக்கியத்தின் அன்பு மகளும் தங்கமாமயிலோன் (பிரசித்த நொத்தாரிசு) அவர்களின் அன்புச் சகோதரியும் ஜெகாணந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயசிறி (யாழ். மாவட்ட செயலகம்), தயாபரன் (பொறியியலாளர் - யுனிசெவ், யாழ்ப்பாணம்), கிருபாகரன் (I.O.M. - யாழ்ப்பாணம்), இரவீந்திரன் (P.H.I, அனலைதீவு), முகுந்தன் (கல்வியியல் கல்லூரி, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயும் வளர்மதி, சிவகுமாரன் (உள்ளக கணக்காய்வாளர், சமுர்த்தி மாவட்ட செயலகம்), தாரணி ஆகியோரின் அன்பு மாமியும் கிசானா, பிரணவன், சங்கேதனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், மணிமேகலை மற்றும் செல்வராஜா, பேரின்பநாயகம், பத்மாவதி, சறோஜினிதேவி, சற்குணவதி, தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.20, தாளையடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி தெற்கு.*
c-mail: yogathaya@yahoo.com.au

**தகவல்: பிள்ளைகள்.** (59228)

### மாணிக்கம் நடராசா



அல்வாய் வடக்கு அன்பகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் நடராசா நேற்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் செல்லம்மா தம்பதியரின் மகனும், தங்கமலரின் அன்புக் கணவரும், குமுதெணி நமசிவாயம் - பிள்ளையம்மா தம்பதியரின் மருமகனும், கௌசுகி, நிவேதனன் (சுவிஸ்), நிர்மலன் (கச்சேரி - முல்லைத்தீவு), நிரஞ்சனன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, திருமதி பாலசிங்கம் இரத்தினம் மற்றும் கந்தசாமி, அன்புழகன் (அதிபர், யா/உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் சகோதரரும் நெவில் தனராஜ், நிவேதனன் வித்தியா, நிர்மலன் கௌதமி, நிரஞ்சனன் துளசி ஆகியோரின் அன்பு மாமனாரும் பூர்விகா, ஆதவன், இலக்கியா ஆகியோரின் பாசமிகு பேரனும் கிருஷ்ணானந்தன் (சுவிஸ்), தர்மபாலன் (சுவிஸ்), ஜெயபாலன், வனிதாமலர், லதாமலர் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2007) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ந.நிர்மலன் (மகன்),**
**மா.மெய்ப்பழகன் (சகோதரன்)**

*அன்பகம்,*
*அல்வாய் வடக்கு.*

### துரைரட்ணம் மகேந்திரன்

(நில அளவையாளர், தலைவர்-மானிப்பாய் பரிஸ் அரிமா கழகம்)

மானிப்பாய், அதிகார் செல்லமுத்து வீதியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற நில அளவையாளர் துரைரட்ணம் மகேந்திரன் அவர்கள் நேற்று காலை (01.04.2007) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*52, வைமன் வீதி,*
*நல்லூர்.* (59239)

**தகவல்: அ.ஸ்ரீபாஸ்கரன்.**

### செல்வி பிலோமினா சூசைப்பிள்ளை (மலர்)



ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பிலோமினா சூசைப்பிள்ளை நேற்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, சபீனா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, ஞானம்மா, டெனிஸ் மற்றும் மார்கிறட், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2007) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41/2, 3ஆம் ஒழுங்கை,*
*ஈச்சமோட்டை, யாழ்.* (59236)

**தகவல்: இ.வு.ஜெயசீலன் (பெறாமகன்).**

**PATRICIAN INSTITUTES**
வாகன உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

நாளை (03.04.2007) செவ்வாய்க்கிழமை தொடக்கம் எமது நிறுவனத்தில் வாகன தகுதிச் சான்றிதழ் (FITNESS CERTIFICATE) வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
*கிழமை நள்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரை*

*மேலதிக விவரங்களுக்கு:*
**பதிவாளர்**
**59, St. Patrick's Rd., Jaffna.** (சி-48848)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 10 - 07 - 1924



விண்ணுலகில் 02 - 04 - 2006

### சலமோன் அந்தோனிப்பிள்ளை

*ஓராண்டு ஓடி மறைந்தாலும் ஓயாத அலைகளாய் நிதமும் உங்கள் நினைவு நெஞ்சை வருடிச் செல்லுகின்றன. அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்த அழியாத பாசத்தை தந்து வாழ்வின் முன்னேற்றத்திற்கு ஏணியாய் இருந்த உங்கள் ஆன்மாவை ஆண்டவர் தன் பாதத்தில் இளைப்பாறச் செய்திடுவார்.*

*58, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாலினிதேவி ராஜேஸ்வரன் (சுசிலா)

குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலினிதேவி ராஜேஸ்வரன் (31.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணமுத்து ராஜேஸ்வரனின் (பரிசகாரர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2007) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் காடாகரம்ப்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

**தகவல்: ராஜேஸ்வரன் (கணவர்).**

### S.F அந்தோனிப்பிள்ளை (அருமை)
**(ஓய்வு பெற்ற தபாலக ஊழியர்)**



யாழ்ப்பாணம் இல. 4 அடப்பன் வீதி, 2ஆம் ஒழுங்கையை வதிவிடமாகக்கொண்ட S.F அந்தோனிப்பிள்ளை 31.03.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப்பு சூசைப்பிள்ளை - மசேலியாவின் மகனும், திருமதி றெஜினா அந்தோனிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் திருக்குடும்ப கன்னியர்மடம்) கணவரும் ஜெயேந்திரா (ஆஸ்திரேலியா), ஜெனற்றா (சுஜி - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் தந்தையும் கௌசல்யா (ஆஸ்திரேலியா), றொபேட் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2007) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
திருமதி அந்தோனிப்பிள்ளை றெஜினா **(மனைவி - லில்லி),**
ஜெனிற்றா **(மகள் - சுஜி),**
ஜெயேந்திரா **(மகன்).**

*இல. 4, அடப்பன் வீதி,*
*2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (59233)

### தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்
**(ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியர்)**

வதிரி விநாயகர் இல்லத்தை சேர்ந்த தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் நேற்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜசிங்கம், அமரர் துரைராஜசிங்கம், திருமதி புஸ்பராணி விவேகானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரத்தினராசா, இராசமலர், குணரத்தினராசா (சவுதி அரேபியா), இராஜலக்சுமி, ஸ்ரீஸ்கந்தராஜா, கிருஷ்ணராஜா, பொன்மலர், அமீர்த்தராஜ் (எக்ஸ்போ எயர்), சந்திரிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி, ராதா, கௌதமன், பிரமிளா, சிநேகப்பிரியா, நிதிகரன், சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசுப்பிரமணியம், திருமதி செல்வமலர் முருகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவநிதா, கங்கா, கௌசிகா, திருமதி நர்மதா தீபன் (லண்டன்), நவஉஷா, கௌதமி, கௌரீசன், கௌரிகா, சினேகா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் விசாலியின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 03.04.2007 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:* **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*